**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

ஆசிரியர் தேர்வு வாரியம் - அரசுப் பொறியியற் கல்லூரிகளில் உள்ள 40 விரிவுரையாளர் பணியிடங்களுக்கான பொது நியமன முறை ( General Recruitment) - ஆணை வெளியிடப்படுகிறது

---

**<u>உயர்கல்வித் துறை</u>**

**அரசாணை (நிலை)எண்.142** **நாள் 25.5.2000**

படிக்கப்பட்டது:-

1. அரசாணை எண்.654, கல்வி, நாள் 22.7.92
2. அரசு கடித (நிலை) எண்.604, உயர்கல்வி, நாள்
3. தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியக் கடித எண்.1643/ஏ2/90 நாள் 6.5.99, 26.5.99 மற்றும் 9.6.99

********

**ஆணை:-**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்டுள்ள அளரசாணையில் அரசுக் கல்லூரிகளில் உள்ள விரிவுரையாளர்களை தேர்ந்தெடுப்பதற்கு தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதி மற்றும் நடைமுறைகளை அரசு வெளியிட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் மைய அரசுப் பணியாளர் தேர்வாணையம் பின்பற்றும் வழிமுறைகளின்படி, விரிவுரையாளர்களைத் தேர்ந்தெடுக்க எழுத்துத் தேர்வும், நேர்காணல் தேர்வும் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்த வேண்டும்.

2. பார்வை 1-ல் படிக்கப்பட்டுள்ள கடிதத்தில், அரசுப் பொறியியற் கல்லூரிகளில் காலியாக உள்ள 79 விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்ப தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

3. பார்வை மூன்றில் படிக்கப்பட்டுள்ள கடிதத்தில், 79 விரிவுரையாளர் பணியிடங்களில் பொது நேரடி ஆள் எடுப்புத் தேர்வுக்கென கீழே குறிப்பிடப்பட்டுள்ள 40 பணியிடங்களுக்கு ஒரு தேர்வு நடத்த வேண்டும் என்றும், விண்ணப்பம் மற்றும் தேர்வுக் கட்டணமாக ரூ .50/-ம் மற்றும் ரூ.200/-ம் , எஸ்.சி / எஸ்.ட்டி பிரிவினரிடமும், ரூ.300/- மற்ற இனத்தவரிடமும் வசூலிக்கலாம் என்றும், தேர்வு நடத்தும் முகவராக பாரதிதாசன் பல்கலைக்கழகத்தை நியணயம் செய்யுமாறும் , அப்பல்கலைக் கழகத்துடன் செய்து கொள்விருக்கிற ஒப்பந்தத்திற்கு (Memorandum of understanding) அனுமதி வழங்குமாறும் ஆசிரியர் தேர்வு வாரியம் கூறியுள்ளது.

**பணியிடங்களின் விவரம்**

| | |
|---|---|
| 1. அமைப்பியல் | 6 |
| 2. இயந்திரவியல் | 8 |
| 3. மின்னியல் | 12 |
| 4. கம்ப்யூட்டர் சயின்ஸ் மற்றும் இன்ஜினியரிங் | 4 |
| 5. பயோ இன்ஜினியரிங் மற்றும் பயோ மெடிக்கல் இன்ஜினியரிங் | 1 |
| 6. ஆங்கியலம் | 3 |
| 7. இயற்பியல் | 1 |
| 8. வேதியியல் | 3 |
| 9. மானிடவியல் | 1 |
| 10. புவியியல் | 1 |
| | 40 |

4. மேலே பத்தி 3-ல் உள்ள தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் கோரிக்கையினை பரிசீலித்தப்பின் அரசுப் பொறியியற் கல்லூரிகளில் மொத்தமுள்ள 79 பணியிடங்களில் 40 விரிவுரையாளர் பணியிடங்களை பொது ஆள் எடுப்பு (General Recruitment) மூலம் கீழ்க்கண்ட வரையறைகளுக்கு உட்பட்டு தேர்வு செய்யுமாறு தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு ஆணையிடப்படுகிறது.

1. பணி நியமனம் செய்வதில் இடஒதுக்கீடு விதி மற்றும் சுழற்சி முறையினை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் பின்பற்றுவதுபோல், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொதுவிதி 22-ஐ பின்பற்றப்பட வேண்டும்.
2. எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு நடத்தும் செயல்முறைத் திட்டத்தினை வாரியமே மேற்கொள்ளலாம்

3. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் கடித எண்.37009/ஏ2/95 நாள் 22.12.98ல் தெரிவித்துள்ள அரசுப் பொறியியற் கல்லூரி விரிவுரையாளர் பதவிக்கான கல்வித்தகுதிகள் பின்பற்றப்பட வேண்டும்.

4. இதற்கான அறிவிக்கை வெளியிடும் நாளில் பொது நிலைப் போட்டி 35 வயது, உடல் ஊனமுற்றோர் - 45 வயது, முன்னாள் ராணுவத்தினர் - 48 வயது. அரசுப் பொறியியற் கல்லூரிகளில் ஏற்கனவே பணிபுரிந்த / பணிபுரிபவர்கள் - 40 வயதுக்குள் இருக்க வேண்டும். பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட / எஸ்.சி / எஸ்.ட்டி / விதவைகள் ஆகியோர்களுக்கு வயது வரம்பு இல்லை.
5. அரசாணை (நிலை) எண்.125, உயர்கல்வி, நாள் 28.3.99ல் பட்டப்படிப்பு விரிவுரையாளர்களுக்கான ஊதிய விகிதத்தை ரூ.8000-275-135000 வழங்கலாம்
6. கண்பார்வையற்றோர் / காதுகேளாதோர் / வாய்பேசாதோர் ஆகியவர்களை பொறியியற் பாடத்திற்க தேர்ந்தெடுக்க வேண்டாம். உடல் ஊனமுற்றோரை ( Ortho) மொழிப் பாடங்களுக்குத் தேர்ந்தெடுக்கலாம்
7. விண்ணப்பக் கட்டணமாக ரூ.50/-ம், எஸ்.சி / எஸ்.ட்டி இனத்தவரிடம் தேர்வுக்கட்டணமாக ரூ.200/-ம் மற்ற இனத்தவரிடம் ரூ.300/-ம் வசூலிக்கப்பட வேண்டும்
8. தமிழ்நாடு கல்விப்பணி விதி 3-ன்படியும், மற்றும் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் பொது விதி 22-ன்படியும் பொறியியற் பாடத்திற்கென ஒரு வேலைமுறைப் பட்டியலையும் (Roaster) பொறியியற் அல்லாத பாடத்திற்கென ஒரு வேலைமுறைப்பட்டியலையும் பராமரிக்கப்பட வேண்டும்
9. தேர்வு நடத்துவது சம்பந்தமாக பாரதிதாசன் பல்லைக் கழகத்திற்கும் / தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கும் இடையே ஏற்படவிருக்கும் Memorandum of understanding-க்கு இணைப்பில் உள்ள நிபந்தனைக்குட்பட்டு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இ.வீ. மணிவண்ணன்,

அரசு செயலாளர்.

பெறுநர்

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்.,சென்னை -25

தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை

பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.